தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

கரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(10.07.2024 முதல் 14.07.2024)

அறிக்கைஎண்: 29/2024 தேதி : 09.07.2024

## கரூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 36 - 39 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 27 - 28 °செ ஆகவும் பதிவானது.

## கரூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (10.07.2024 முதல் 14.07.2024).

| கடந்த வார வானிலை (05.07.2024 முதல் 08.07.2024) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (10.07.2024 முதல் 14.07.2024) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 05/07 | நாள்-2 06/07 | நாள்-3 07/07 | நாள்-4 08/07 | தேதி | நாள்-1 10/07 | நாள்-2 11/07 | நாள்-3 12/07 | நாள்-4 13/07 | நாள்-5 14/07 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ.) | 0 | 0 | 0 | 2 | 3 |
| 37 | 39 | 36 | 36 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 35 | 36 | 37 | 36 | 35 |
| 27 | 28 | 27 | 27 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 26 | 26 | 27 | 26 | 26 |
| 6 | 6 | 6 | 7 | மேகமூட்டம் (ஆக்டா) | 7 | 6 | 5 | 8 | 8 |
| 67-57 | 60-52 | 69-50 | 70-47 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 60-30 | 60-30 | 70-30 | 80-50 | 70-40 |
| 20 | 22 | 24 | 25 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 22 | 22 | 22 | 20 | 28 |
| தென் தென் மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | காற்றின் திசை | மேற்கு வட மேற்கு | மேற்கு வட மேற்கு | மேற்கு வட மேற்கு | மேற்கு வட மேற்கு | மேற்கு வட மேற்கு |

## கரூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 13.07.2024 மற்றும் 14.07.2024 ஆகிய தினங்களில் லேசான தூரல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 35 - 37 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26 - 27 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 60 - 80 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 30 - 50 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 22 - 28 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் மேற்கு வட மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | |
|---|---|
| பொது | வடிகால் வாய்க்கால்களை பன்னை குட்டையுடன் முறையாக இணைத்து மழை நீரை எளிதாக வடிப்பதுடன் மழை நீரை சேமிக்கவும் முடியும். |

| | | |
|---|---|---|
| நெல்<br>தென்னை | நடவு வயல் | தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக குருத்துப்பூச்சிகளை கட்டுப்படுத்த இனக் கவர்ச்சிப்பொறிகளை ஏக்கருக்கு 4 என்ற அளவில் வைத்து தாய் அந்துப் பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். மேலும் இதனைக் கட்டுப்படுத்த புரோபனோபாஸ் மருந்தினை ஏக்கருக்கு 400 மில்லி (அ) கார்டிராப் ஹைட்ரோகுளோரைடு குருணைகளை ஏக்கருக்கு 6 கிலோ வீதம் சம அளவு மணலுடன் கலந்தும் இடலாம். |
| | | தற்போது நிலவும் தட்பவெப்பநிலையின் காரணமாக தண்டு துளைப்பானின் தாக்கம் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த குளோர்பைரிபாஸ் 20 இசி 500 மி.லி / ஏக்கர் அல்லது புரொபனோபாஸ் 50 இசி 400 மி.லி/ ஏக்கர் என்ற அளவில் பயன்படுத்தவும். |
| | | குறுவை பயிர் நடவு செய்து 40 நாட்கள் ஆன பயிர்களுக்கு இரண்டாவது தவணையாக ஏக்கருக்கு 35 கிலோ யூரியாவும் 10 கிலோ பொட்டாஷ் உரத்தினையும் கலந்து இடவேண்டும். |
| கால்நடைகளுக்கு | மாடு | தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக கால்நடைகள் மற்றும் கறவை மாடுகளுக்கு கோமாரி நோய் வருவதற்க்கு வாய்ப்புள்ளது எனவே கால்நடைகளுக்க் கோமாரி நோய்க்கான தடுப்பூசி போடவும். |

## குறுஞ்செய்தி

வடிகால் வாய்க்கால்களை பன்னை குட்டையுடன் முறையாக இணைத்து மழை நீரை எளிதாக வடிப்பதுடன் மழை நீரை சேமிக்கவும் முடியும்.

.

**இயக்குநர்**